Arima Nokku
19:2 ஏப்பிரல் 2025

ISSN 2320-4842 (Print)
ISSN 3049-2688 (Online)

# அரிமா நோக்கு



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பண்பாட்டுக் காலாண்டிதழ்.

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பிணைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEAR REVIEWED JOURNAL

https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)

ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
19 : 2 ஏப்ரல் 2025

ஆசிரியர்
தமிழ்ச் செம்மல்
பேராசிரியர் முனைவர்
இரா. பன்னிருகைவடிவேலன்

ஆசிரியர் குழு
நா.கணேசன் (அமெரிக்கா)
நா.சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு.பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
மனோன்மணி தேவி (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ.இலக்குமிநாராயணன்
கோ.பழனி
மு.வையாபுரி
சி.சிதம்பரம்
பா.விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச.திருநாவுக்கரசு
ப.குமார்
கி.துர்காதேவி
தே.ராஜகுமார்
த.பாலமுருகன்

ஓவியர்
சுபா. முனிவேல்
அ. கார்த்திக் தங்கராஜன்

அறிவுரைக் குழு
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

பதிப்பாசிரியர்
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# உள்ளடக்கம் CONTENTS

Illustration Of Native Culture And Host Culture: A Critical Study of Bharati Mukherjee s Select Fiction
M. Parvatha Varthini - Dr. C. Ramya 258

Exploring Communal Trauma: A Comparative Study of Khushwant Singh's Train to Pakistan and Manohar Malgonkar's a Bend in the Ganges
Mr. Raja - Dr. M. Sumithra 262

Exploring the Rural Realities: Perumal Murugan's Narrative Voice in Tamil Literature
P. Elayarani - Dr.K. Maheswari 268

Portrayal of Victimized Citizens and the Corrupt Hungry Rulers in Arun Joshi's The City and the River: An Appraisal
Premchandar. P - Dr. S. Chelliah 275

Pathetic Plight of the Indian Workers: A Post Humanist Study of Mulk Raj Anand s Coolie: An Appraisal
R. Esther Reshma - Dr. S. Bharathiraja 279

பொருள்சார் பண்பாடு நோக்கில் - சங்கு வளையல்
செ. விஜய்சுந்தர் - ஏ. பால்பிரபு சாந்தராஜ் 283

சங்க இலக்கியத்தில் போர்கருவிகளின் சிறப்புகள்
மா. ஜெயலட்சுமி - முனைவர் சி. கணேசன் 287

உரைகளும் உரையாசிரியர்களும்
முனைவர் ஏ. கோதண்டராமன் 290

வ..உ. சி.யின் மறக்கவொண்ணா தமிழ்த் தொண்டுகள்
முனைவர். ம. தாமரைச்செல்வி 297

ஆன்மீகக் கல்வியின் அவசியம் குறித்து வேதாத்திரி மகரிசி அவர்கள் வலியுறுத்தும் கருத்துக்கள்
த. கௌரி - முனைவர் க. சுமதி 302

ஈரம் கசிந்த நிலத்தில் - மாறாப் பண்பாட்டின் மண்ணில் விழுந்த விதை - அம்மணி
ரா. கவிதா - முனைவர் செ. இளையராஜா 306

பேடிக்கூத்து அன்றும் - இன்றும் - பெ. வெங்கடேஷ் 311

ஆற்றுப்படை இலக்கிய அமைப்பும் இலக்கணமும்
திருமதி ம. பாக்கியலட்சுமி - முனைவர் சு. சதீஷ்குமார் 316

சூழலியக் கோட்பாடு - முனைவர் பி.அனுராதா 320

கவிஞர் பழநிபாரதியின் கவிதைகளில் அழகியல்
வ. ஜெயக்குமார் 325

ஜெயகாந்தன் சிறுகதைகளில் பெண்களின் வாழ்வாதாரம்
ஆர். பிரமிளா - முனைவர் கோ. சுரேஷ் 329

மந்தரை (கூனி) - திருமதி பா. பத்ரகாளி 334

திருப்பரங்குன்றத்தின் மகிமையும் செவ்வேளின் அருளும்
முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா 338

வரலாற்று அடிப்படையில் சிலம்பும் -முதுவரும்
முனைவர் அ. மகபூபு 342

சங்க இலக்கியம் காட்டும் ஆநிரை வளர்ப்பும் மருத்துவமுறையும்
முனைவர் ம. சித்ரகலா 346

ஆசிரியம்... வாழ்வின் உயிர்மை - முனைவர் ச.சந்திரகலா 351

சைவ சித்தாந்தம் முன்வைக்கும் உயிர் - த. பாலமுருகன் 354

தீர்த்தயாத்திரை நாவலில் பெண் சித்தரிப்புகள்
ப. அருணா - முனைவர் இரா. கோகுல் 356

சங்க இலக்கியத்தில் தோழி உளவியல் - தே. ராஜகுமார் 360

முதுமொழிக் காஞ்சியில் நட்பு - கு. நளினி 364

வர்மக் கலையும் மருத்துவக் குணங்களும் - க. இராஜா 367

பாரதி ஒரு கடல் - முனைவர் ச. இராஜலதா 372

பட்டினப்பாலையில் வணிகம் - முனைவர் து. விசாலாட்சி 375

திருமூலர் பாடல்களில் பன்முகச் சிந்தனைகள் - கோ. மலர்விழி 378

சிலப்பதிகாரத்தில் தமிழனின் பண்பாடுகள் - இரா. வீரமணி 382

கணினித் தமிழும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பும்
ச. இலக்கியசங்கீதா - க. பிரியா 387

அறிவியல் நோக்கில் சைவசித்தாந்த தத்துவங்கள்
வீ. பொன்னுசாமி - நா. சண்முகம் 390

சங்க இலக்கியத்தில் போர்ச்சூழல் - ரா.திவ்யா 394

https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# திருப்பரங்குன்றத்தின் மகிமையும் செவ்வேளின் அருளும்

**முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

## ஆய்வுச்சுருக்கம்

சங்ககாலம் முதற்கொண்டு தற்காலம் வரை மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவராக, ஒரு குழந்தையாக, அழகுவடிவாக, உருப்பெற்று போற்றி வழிபடுகின்ற கடவுளாகக் கருதப்படுவது முருகப்பெருமானே ஆகும். குன்றுதோறும் குமரன் குடியிருப்பான் என்பார்கள். அவ்வகையில் அறுபடை வீடுகளில் முதன்மையாகக் கருதப்படுவது திருப்பரங்குன்றமே எனலாம். சூரபதுமனை அழித்து வெற்றி வாகை சூடிய வேலவனுக்கு வானவர்களின் தலைவனான தேவேந்திரன் தன்னுடைய மகள் தெய்வயானையை எவ்வுலகும் போற்றுமாறு திருமணம் செய்து கொடுத்த இடமாகவும் அமைந்துள்ளது இத்திருப்பரங்குன்றம். இதன்சிறப்பு குறித்தும், முருகப்பெருமானின் அருள் வடிவு குறித்தும், விளக்குகின்ற விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

## முன்னுரை

ஒருவன் தனக்கு ஏற்பட்ட இன்ப, துன்பங்கள் அனைத்திற்கும் முதன்மையுடையவனாக இறைவனையே நம்புகின்றனர். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பார்கள். அவ்வகையில் தமிழர்களின் தெய்வமாக விளங்குகின்ற முருகன் வீற்றிருக்கின்ற திருப்பரங்குன்றின் சிறப்பு, வழிபாட்டுமுறைகள், காற்றின்தன்மை, வேண்டுதல்கள், இறைவனின் அருள்தன்மை போன்றவற்றை பரிபாடலின் வழி ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## திருப்பரங்குன்றம் இமயமலையை ஒத்திருத்தல்

திரு+பரம்+குன்றம்=பரம் என்றால் பரம்பொருளான சிவபெருமான். குன்றம் என்றால் குன்று (மலை) திரு என்பது அதன் சிறப்பை உணர்த்தும் அடைமொழியாகத் திருப்பரங்குன்றம் என ஆனது. இக்குன்றமானது லிங்க வடிவமாக அமையப்பெற்றுள்ளது. நக்கீரர் இத்தலத்து முருகனை வழிபட்டு தனக்கு ஏற்பட்ட சருமநோயை போக்கிக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இத்தலத்தில் திருமணம் செய்து கொள்வது சிறப்பாகக் கருதப்படுகிறது. தைப்பூசம், கார்த்திகைத்திருநாள், பங்குனி உத்திரநாள் விழாக்கள் இங்கு நன்றாகக் கொண்டாடப்படுகிறது. "சேயோன் மேய மை வரை உலகமும்" (தொல். 951) எனத் தொல்காப்பியரும் மலையில் உறையும் கடவுளாக முருகனைக் குறிக்கின்றார். இம்மலை இலக்கியங்களில் தண்பரங்குன்று, தென்பரங்குன்று, பரங்கிரி, திருப்பரங்கிரி, பரமசினம், சத்தியகிரி, கந்தமாதனம், கந்தமலை எனப் பல பெயர்களில் வழங்கப்படுகின்றது. இக்குன்றில் திருமால், சிவபெருமான், பிரம்மன், பிரம்மனிடமிருந்து தோன்றிய ஆதித்தர் பன்னிருவர், தேவமருத்துவராகிய அசுவினி தேவர்கள், வசுக்கள் எண்மர், உருத்திரர் பதினொருவர், திசைக்காவலர் எண்மர், இவர்கள் அல்லாத தேவர்கள், அசுரர்கள், தவமுனிவர்கள், என அனைவரும் வந்து தங்குவதற்கு இடமாக இத்திருப்பரங்குன்றம்

அமைந்துள்ளது. அதனால் இக்குன்றம் இமயமலையை ஒத்ததாக விளங்குகின்றது என்பதை,

"புள்மிசைக் கொடியோனும் புங்கவம் ஊர்வோனும்

மலர்மிசை முதல்வனும் மற்று அவனிடைத்தோன்றி

.....................................................................

பரங்குன்று இமயக்குன்றம் நிகர்க்கும்

(பரிபாடல் 8 : 2-11)

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன. அகநானூற்றில் மருதன் இளநாகனார் என்னும் புலவர் திருப்பரங்குன்றை "முருகன் குன்றம்" (அகம்.59) என்றே அழைக்கின்றார். எருக்காட்டூர் தாயங்கண்ணனார் என்னும் புலவர் " ஒடியா விழவின் நெடியோன் குன்றம்" (அகம். 149) எனப் புகழ்கின்றார். மதுரைக்காஞ்சியில் "தனி மழை பொழியும் தண் பரங்குன்றம்" (மதுரைக்காஞ்சி வரி. 264) எனக் குறிப்பிடுகின்றது. பரிபாடலில் வரும் முருகனின் ஏழு பாடல்களும் திருப்பரங் குன்றின் பெருமையையே பேசுகின்றன.

இம்மலையில் அருவிகள் ஆரவாரித்து வீழ்வதால் சிகரங்கள் முத்து மாலை அணிந்தது போன்று காட்சியளிக்கின்றன. உலகிலேயே மிகப் பெரியதாக, உயர்ந்ததாகக் கருதப்படுவது இமயமலைத்தொடரே ஆகும். இம்மலையோடு திருப்பரங்குன்றம் ஒத்திருப்பது என்று வருணிக்கின்ற காட்சியைக் காணும்போது தமிழர்களின் பரந்துபட்ட வாழ்வியல் சூழலை அறிய முடிகின்றது.

## கருவறையும் கடவுள் உருவமும்

திருப்பரங்குன்றக் கோவிலின் கருவறை மலையைக்குடைந்து உருவாக்கப்பட்டதாகும். அர்த்த மண்டபத்தைக் கடந்து கோவிலின் கருவறையை அடைந்த பின்னர் ஆறுபடிகள் தென்படும். இந்த ஆறுபடிகளும் சரவணபவ என்ற ஆறெழுத்தைக் குறிப்பிடுகின்றன. அவ்வாறெழுத்துக்களை உள்ளத்தில் நினைத்துக்கொண்டே சென்றால் ஆறு எழுத்தில் அடங்கிய முருகனைக் காணும் வாய்ப்பு எளிதில் கிடைக்கும் என்ற மூலக் கருத்தையே அப்படிகள் மறைமுகமாக உணர்த்துகின்றன. முருகன் தெய்வயானையின் திருமணக்கோலக் காட்சி பார்ப்பவர்களை ஈர்ப்பனவாக அமைந்து நிற்கின்றன. முருகனின் திருவடியின் கீழ் அவன் ஊர்தி களில் மயில் நீங்கலாக யானை, ஆடு ஆகியவற்றின் வடிவங்கள் அழகுபெற வடிக்கப்பெற்றுள்ளன. அங்கு இருக்கின்ற சிற்பத்தின் உருவங்கள் ஒவ்வொன்றும் உயர் கருத்தை அறிவிப்பன போன்றே அமைந்துள்ளன.

திருமண மண்டபத்தின் கீழ்த்திசையில் திருமகள் தீர்த்தமும், சன்னியாசி தீர்த்தமும் உள்ளன. சன்னியாசி தீர்த்தம் என்பது கிணற்று நீராகும். இதனை பிரம்மகூபம் என்று சொல்லுவர். பிரம்மனால் தோற்றுவிக்கப்பட்டமையால் பிரமம்கூபம் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். பாண்டியன் ஒருவன் தனக்கு ஏற்பட்ட குட்ட நோயை இக்கிணற்று நீரில் குளித்ததன் பொருட்டு அந்நோய் முழுவதுமாக நீங்கியது என்பர். உடல் பிணியுற்றோர் இன்றைக்கும் இக்கிணற்று நீரில் குளித்தால் உடலில் ஏற்பட்டுள்ள நோய் நீங்கும் என்று நம்புகின்றனர். முருகனுக்கு ஸ்நானம் செய்ய அந்தணர்கள் இந்த நீரையே பயன்படுத்தி வருகின்றனர். இறைவனின் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டே இருந்தால் துன்பங்களை பொறுத்துக் கொள்ளும் மனப்பக்குவம் வந்துவிடும் என்பார்கள். முருகா என்னும் நாமத்திற்கும் வலிமையுண்டு. ஒன்றைத் திரும்பத் திரும்ப உச்சரிக்கும் போது அவ்வார்த்தைக்குச் சக்தியுண்டாகிறது. அவ்வகையில் மக்கள் மாலைப் பொழுது தோறும் வந்து தங்கி இசைப்பாடல்கள் பாடியிருக்கின்றனர். தேன் ஒழுகுவதால் மரமே நனைகின்ற இத்திருப்பரங்குன்றினைத் தவிர விண்ணுலகை விரும்பிச் செல்பவர்களாக அடியவர்கள் எவரும் இல்லை என்பதை,

"மாலை மாலை அடி உறை இயைநர்

மேலோர் உறையுளும் வேண்டுநர் யாஅர்"

(பரிபாடல் 7 : 7-8)

என்ற பாடல் உணர்த்துகின்றது. அவ்வகையில் முருகனைப் புகழ்ந்து பாடியவர்களில் முதன்மையாக நிற்பவர் அருணகிரிநாதரே ஆவார். திருப்பரங்குன்றத்து முருகன்மேல் 19 திருப்பாடல்களைப் பாடியுள்ளார். "திருப்பரங்கிரிதனில் உறை சரவண பெருமாளே" (திருப்புகழ் : 7) என்றெல்லாம் முருகனின் புகழைப் பாடி உருகுகின்றார்.

## திருப்பரங்குன்றின் வழிகள்

திருப்பரங்குன்றின் வழிகளில் ஏழு துளைகளையுடைய குழல், ஐந்து துளைகளை

ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

யுடைய குழல், யாழ் ஆகியவற்றிலிருந்து பிறந்த இசையைப் போன்று வண்டுகளும், தும்பிகளும் அவ்வழியில் இசையை எழுப்பிக் கொண்டிருக்கின்றன. சுனைகளில் பூக்கள் அழகாக மலர்ந்திருக்கின்றன. கொன்றை மரங்கள் பூத்துக் குலுங்குகின்றன. காந்தள் மலர்கள் எங்கும் மணம் பரப்புகின்றன. அதுமட்டுமின்றி பல்வேறு மலர்களும் மலர்ந்து மணம் வீசுகின்றன. இம்மணங் களையெல்லாம் தழுவிக் கொண்டு தென்றல் காற்று செல்லும் வழியை உடையதாக அமைகின்றது இத்திருப்பரங் குன்றம். கரும்பை உண்ணக் கொடுத்து யானைகளை மரத்தில் கட்டுபவர்கள் ஒருபுறம், மாலைகள் அணிந்த குதிரைகளை வழியினின்று விலக்கி வேறிடத்தே கட்டுபவர்கள் ஒருபுறம், வலிமை யான தேர்களை வழியினின்று அப்பாற் செலுத்தி நிறுத்துபவர்கள் ஒருபுறம் என்றிருக்க அவ்இடைப்பட்ட நிலம் பாண்டியனின் பாசறையை ஒத்ததாக விளங்குகின்றது என்ற காட்சியினை, பரிபாடல் (19) விளக்குகின்றது. மேலும்,

**"வளர் பூங்கோங்கம் மாதவியோடு மல்லிகைக்**

**குளிர்பூஞ்சாரல் வண்டறைசோலைப் பரங்குன்றம்**

**தளிர்போன்மேனித் தையல் நல்லாளோடு ஒரு பாகம்**

**நளிர் பூங்கொன்றை சூடினன் மேய நகர்தானே"**

(தேவாரம், திருப்பரங்குன்றம், திருமுறைப் பதிகம் : 4)

என திருஞானசம்பந்தரும் சோலைகள் சூழ்ந்த திருப்பரங்குன்றின் அழகினை வருணிக்கின்றார். அதுமட்டுமின்றி இம்மலையை நாள்தோறும் வந்து தொழுவோரின் வினைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என தாம் இயற்றிய தன்னுடைய பதிகத்தில் பாடியுள்ளதையும் காண முடிகின்றது. சுந்தரர் தேவாரத்திலும் இரண்டாவது தலமாக இத்திருப்பரங்குன்றம் அமைந்துள்ளது.

## காற்றின் நிலை

நாம் சுவாசிப்பதற்கு அடிப்படையாக காற்று அமைகின்றது. அக்காற்று தூய்மையுடைதாக அமைந்தால் எந்த ஒரு நோயும் நம்மை அண்டாது எனலாம். இன்று இரசாயண, வாகனப் புகை மண்டலத்தில் வாழ்வைக் கழித்து ஓசோனையே ஓட்டை அடையச் செய்து ஆயுளை குறைத்துக் கொண்டிருக் கின்ற நமக்கு சங்ககால வாழ்வு நல்லதொரு படிப்பினையைக் கற்றுக்கொடுக்கின்றது. மைந்தர்கள் பூசிய சந்தனக் குழம்பிற் படிந்த காற்றும், மகளிரின் கூந்தலிற் படிந்த காற்றும், முருகனுக்கு நிகழ்த்தும் பூசையில் எழும் தூபத்திற் படிந்த காற்றும் திருப்பரங்குன்றில் எப்போதும் வீசிக்கொண்டிருக்கும் என்பதை,

**"தண் கமழ் சாந்தம் தைஇய வளியும்**

.........................................

**முருகு கமழ் புகை நுழைந்த வளியும்"** (பரிபாடல் 21 : 46-53)

என்ற இவ்வடிகள் காற்றின் தன்மையை எடுத்துரைக்கின்றன.

## இறைவனை வழிபடுதல்

வழிபடு என்ற சொல்லிலிருந்து வழிபாடு என்ற சொல் பிறந்ததாகக் கூறுவர். வழிபாடு என்பதற்கு பின்பற்றி ஒழுகுதல் என்று பொருள். நம் முன்னோர்கள் வழி வழியாகப் பின்பற்றி வந்த இறைவனின் அருள் தன்மையை, ஆற்றலை, அன்பு நெறியை நாம் கடைபிடித்து ஒழுகுவது வழிபாடு எனலாம். இங்கு முருகனை வழிபடும் அடியவர்கள் அப்பெருமானுக்கு திருவிழா நடத்த விரும்புவது, சந்தனம், குங்குமம் போன்று நிறத்தினாலும், மணத்தினாலும் மாறுபட்ட மணக்குழம்புகளை எடுத்து வருவது, பெருமையுடைய புகைப்பொருட்கள், அடிக் கின்ற காற்றிற்கும் அவியாத விளக்கிற்கு வேண்டிய பொருட்கள் , நறுமணங்கமழும் மலர்கள், இனிய இசையைத் தரும் மத்தளம், மணி, கயிறு, மயில், கோடரி, பிணிமுகம் என்னும் யானை, ஊர்தி ஆகியவற்றையும் முருகவேளுக்கு விருப்பமான பிற பொருள் களையும் கையில் ஏந்திக் கொண்டு இறைவனைத் தொழுது வணங்குகின்றனர். கனவில் தம் காதலரைக் கண்டு கை தொட்டுப் பழகியது நனவில் நடக்க வேண்டும் என்றும், வையையில் புதுநீர் பெருக்கெடுத்து ஓட வேண்டும் என்றும், குழந்தையில்லாதவர்கள் குழந்தை பாக்கியம் கிடைத்தால் இன்ன இன்ன பொருள்களைத் தருவேன் என்று வேண்டுபவர்கன் ஒருபுறம், தன்னுடைய கணவன் செய்கின்ற தொழில் சிறப்புற அமைந்து பொருள் வாய்த்திட வேண்டும் என்று சொல்பவர்கள் ஒருபுறம், எங்கள் தலைவர் போர்த்தொழிலில் சிறந்து வெற்றி பெறவேண்டும் என அர்ச்சனை

ISSN: 2320-4842 (Print)
ISSN: 3049-2688 (Online)

செய்வோர் ஒருபுறம், இம்மண்ணுலகில் மழை வறண்டு போனாலும் திருப்பரங் குன்றின் அருவியில் இருந்து வருகின்ற நீர் வற்றக்கூடாது எனவும் மக்கள் வேண்டி நிற்கின்றனர். இதனைப் பரிபாடல் உணர்த்துகின்றது.

**வேறுபடு சாந்தமும் வீறுபடு புகையும்**

**ஆறுசெல் வழியின் அவியா விளக்கமும்**

..............................................................

**ஐ அமர் அடுக என அருச்சிப்போரும்**

*(பரிபாடல் 8:90-108)*

ஒன்றை வேண்டி வழிபடுகின்ற முறை இன்றளவும் பயன்பாட்டில் இருப்பதை நாம் பார்க்க முடிகின்றது. நாம் வேண்டிய செயல் சரியாக நடந்துவிடுகின்ற பொழுது அதற்கு கைம்மாறாக, நேர்த்திக் கடனாக பொருள்களை வாங்கி வைப்பது, கோவிலுக்குச் செல்வது, உடலை வருத்தி பிராத்தனை செய்வது, இறைவனுக்கு காணிக்கை செலுத்துவது போன்ற இறைவ னின் மீதான நம்பிக்கையை இன்றளவும் காண முடிகின்றது. அந்நம்பிக்கையின் மூலம் மன அமைதியையும் பெறுகின்றனர். "ஆதி பகவன் முதற்றே உலகு" (குறள்:1) என வள்ளுவரும் உலகிற்கு முதன்மையாகக் கடவுளையே சுட்டுகின்றார். அக்கடவுளின் வரிசையில் முதன்மை பெறுபவராக மக்களின் மனதில் நிலைத்து நிற்பவராக முருகப் பெருமான் அமைகின்றார். "முருகனுக்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை மிளகுக்கு மிஞ்சிய வைத்தியமும் இல்லை" என்பது பழமொழி . அண்டை மாநிலமான கேரளா முதற்கொண்டு பிற மாநிலங்களும், இலங்கை, மலேசியா, பர்மா, வியட்நாம், மொரீசியஸ், தாய்லாந்து, தென் ஆப்பிரிக்கா, போன்ற மேலை நாட்டினர்கள் பலரும் விரும்பும் கடவுளாக முருகப்பெருமான் விளங்குவது தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றுகின்ற ஒன்றாகும்.

**அருள்தன்மை**

முருகனுக்குரிய ஆயுதமாக வேலும், மலராக கடம்பமாலையும் விளங்கியதைப் பரிபாட லின் 5ஆம் பாடல் குறிப்பிடுகின்றது. பகைவரை அழித்து கிரௌஞ்சமலையைப் பிளந்ததைப் பரிபாடலின் 21 ஆம் பாடல் கூறுகின்றது. வேல் பற்றிய செய்தி குறுந்தொகை (கடவுள்வாழ்த்து), அகநானூறு (10) கலித்தொகை (27) பரிபாடல் (19, 26) போன்ற நூல்களில் இடம்பெற்றுள்ளன.

அறநெறியில் வாழும் முறையுடையோர் இறைவனது அருளைப் பெற முடியும் என்றும் அறநெறியல்லாதோர் இறைவனின் திருவடி நிழலை அடைய முடியாது என்றும் பரிபாடலின் 5ஆம் பாடல் சுட்டுகின்றது. ஏழு உலகங்களையும் அருளாட்சி செய்பவ னாக, காப்பவனாக முருகன் விளங்குகின் றான். ஒரு தலைவன் பரத்தையிடம் செல்கின்றான். அதற்கான அறிந்து அவனிடம் தென்பட தலைவி வினவுகின் றாள். அதற்கு பொய்ச்சூள் உரைக்கின்றான். தனக்குத் தெரிந்த பல்வேறு பொருட்கள் மீது ஆணையிடுகின்றான். அதில் திருப்பரங் குன்றம், மயில், வேல், வள்ளி, அந்தணர்கள் போன்றோர் இடம்பெறுகின்றனர். அதற்கு மறுமொழியாகத் தோழி தலைவனே நீ அந்தணர்கள் மீது கூட பொய்ச்சூள் உரை, ஆனால் முருகன் மீது மட்டும் பொய்ச்சூள் உரைத்தால் அது நமக்கு துன்பத்தையும், அழிவையும் ஏற்படுத்திவிடும் என எடுத்துரைக்கின்றாள். இதனை "என் பாணி நில் நில் – எலாஅ! பாணி நீ நின் சூள்" (பரிபாடல் 8 : 56 - 71) என்ற பாடலடி பதிவிடுகின்றது. ஒருவர் தவறு செய்யும் போது அதை நிரூபிக்க சத்தியம் செய்வது இன்றும் வழக்கமாகவே உள்ளது. சாமி மீது சத்தியமா நான் இதைச் செய்யவே இல்லை என ஒரு செயலை உறுதிப்படுத்துகின்றோம். இங்கு மக்களின் மனதில் நிறைந்திருக்கின்ற முருகன் குற்றத்தைத் தண்டிக்கின்றான் என்ற நம்பிக்கை உணர்வே ஒருவனை நல்வழிப் படுத்த அடித்தளமாக அமைகின்றது என்பதைப் பார்க்க முடிகின்றது

**முடிவுரை**

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. அதற்கேற்ப ஒவ்வொரு ஊர்களிலும் அமைந்துள்ள கோவிலும், அதன்வழிபாடும் சிறப்புப் பெறு கின்றன. அவ்வகையில் திருப்பரங்குன்றின் சிறப்பும் எண்ணில் அடங்காதவையாக அமைந்து நிற்கின்றனஎன்பதை இக்கட்டுரை விளக்கி நிற்கின்றது.

INTERNATIONAL
STANDARD
SERIAL
NUMBER
INDIA

# ISSN National Centre, India

## National Science Library

CSIR- National Institute of Science Communication and Policy Research
14, Satsang Vihar Marg, New Delhi – 110067

# *Certificate of Registration*

# पंजीयन प्रमाणपत्र

*This is to certify that the periodical "Arima Nokku" has been registered in the ISSN Registry as per the details given below:*

प्रमाणित किया जाता है कि "अरिमा नोक्कु" पत्रिका को निम्न विवरण के अनुसार आई एस एस एन अभिलेख में पंजीकृत किया जा रहा है:

*International Standard Serial Number (ISSN)*: **2320-4842**

अंतर्राष्ट्रीय मानक क्रम संख्या (आई एस एस एन)

*Language(s)*/भाषा(यें) : *Multiple Languages*/ बहुभाषी
*Periodicity*/समयावधि : *Quarterly*/त्रैमासिक
*Format*/प्रारूप : *Print*/प्रिंट
*Publisher*/प्रकाशक : *Arima Nokku,*
*259, Nehru Nagar, 2nd Main Road, Kottivakkam,*
*OMR, Chennai - 600096, Tamil Nadu, India*
अरिमा नोक्कु,
259, नेहरु नगर, 2nd मेन रोड, कोटटिवक्कम,
ओएमआर, चेन्नई - 600096, तमिल नाडु, इंडिया

National Institute of Science Communication and Policy Research
NIScPR
सीएसआईआर-निस्पर

*Sanjaykumar Baburao Burde*
संजयकुमार बाबूराव बुरडे
*Head, National Science Library & ISSN National Centre, India*
प्रमुख, नेशनल साइंस लाइब्रेरी एंड आई एस एस एन नेशनल सेंटर, इंडिया

*Date*/दिनांक: 14-05-2024